# பாரதிதாசன் பல்கலைக்கழகம்
# திருச்சிராப்பள்ளி–620024

முனைவர் ஆ. செல்வம் எம்.ஏ. பி.ஹெச்.டி
தேர்வு நெறியாளர்

தொலைபேசி: 0431- 2407016,2407060
தொலை அச்சு: 0431-2407444

---

பட்டப்படிப்பு தேர்வுகள்/ ஏப்ரல் 2016 நாள் :25.01.2016

பெறுநர்
முதல்வர்
இணைவு பெற்ற அனைத்துக் கல்லூரிகள்

ஐயா/அம்மையீர்,

பொருள்: ஏப்ரல் 2016-ல் நடைபெறவிருக்கும் பல்கலைக்கழக இளநிலைத் தேர்வுகளுக்கு விண்ணப்பிக்க வேண்டிய கடைசி நாள் மற்றும் தேர்வுகள் துவங்கும் நாள் – தெரிவித்தல் - தொடர்பாக.

--------

நடைபெறவிருக்கும் ஏப்ரல் 2016 பல்கலைக்கழக இளநிலைத் தேர்விற்குப் பூர்த்தி செய்யப்பட்ட தேர்வு விண்ணப்பங்களைப் பெறுவதற்குரிய கடைசி நாள் மற்றும் தேர்வுகள் துவங்கும் நாள் ஆகியவை கீழ்க்கண்டவாறு தெரிவிக்கப்படுகிறது.

**பூர்த்தி செய்யப்பட்ட தேர்வு விண்ணப்பங்களைப் பெறுவதற்குக் கடைசி நாள்:**

தண்டத் தொகையின்றி : 11.03.2016 வெள்ளிக்கிழமை

தண்டத் தொகையுடன் : 18.03.2016 வெள்ளிக்கிழமை

இளநிலைப் பருவத்தேர்விற்கான
எழுத்துத்தேர்வுகள் துவங்கும் நாள்: 20.04.2016 புதன்கிழமை

மேற்கண்ட தகவல்களை மாணவர்களுக்கும், மற்றும் ஆசிரியர்களுக்கும் தெரிவிக்கும் வகையில் கல்லூரி அறிவிப்புப் பலகையில் வெளியிடுமாறு அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

பூர்த்தி செய்யப்பட்ட தேர்வு விண்ணப்பங்கள் அனைத்தும் பல்கலைக்கழகத்திற்கு வந்து சேரவேண்டிய கடைசி நாள் 21.03.2016 திங்கட்கிழமை. மேற்காணும் தேதிக்குப் பின்னர் வரும் அனைத்து விண்ணப்பங்களும் எக்காரணத்தைக் கொண்டும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. பல்கலைக்கழகப் பருவத்தேர்வுகளுக்கு (Semester) 90 நாட்கள் கல்லூரி, செயல்பட்டிருக்கவேண்டும். மேற்கண்ட நாட்களுக்குக் குறைவாக வருகைப்பதிவு கொண்ட மாணவர்களுக்குத் தேர்வு நடத்த இயலாது எனத் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது. 90 நாட்கள் கல்லூரி இயங்கியதற்குரிய சான்றிதழைத் தேர்வு துவங்குவதற்குப் பத்து நாட்கள் முன்னதாகப் பல்கலைக்கழகத்திற்கு அனுப்பி வைக்கும்படி கல்லூரி முதல்வர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். இளநிலைப் பாடப்பிரிவுகளுக்கான தேர்வு விண்ணப்பங்களைத் தனித்தனியாக இணைப்புக் கடிதங்களுடன் அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது. தேர்வு விண்ணப்பத்துடன் அனுப்பும் பட்டியலினை குறுந்தகட்டுடன் (List with CD) இணைத்து அனுப்பவும்.

மீளப்பயிலுதல் (Re-doing) மறு சேர்க்கை (Re-admission) மற்றும் மாற்றுச்சேர்க்கை (Transfer admission) பெற்ற மாணவ/மாணவிகளின் தேர்வு விண்ணப்பத்துடன் மேற்கண்ட சேர்க்கைக்களுக்காக பதிவாளரிடமிருந்து பெறப்பட்ட ஆணையின் நகலை மறக்காமல் இணைத்து அனுப்பும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது. மேலும் தேர்வு விண்ணப்பத்தின் மேல் மாற்றுச்சேர்கையா,மறுசேர்க்கையா,மீளப்பயிலுதலா என்பதைத் தெளிவாகக் குறிப்பிடவும். அவ்வாறு அனுப்பப்படாத தேர்வு விண்ணப்பங்கள் கண்டிப்பாக ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

இக்கடிதம் கிடைக்கப்பெற்றமைக்கு ஒப்புதல் அளிக்குமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

இப்படிக்கு,

25/1/16

தேர்வு நெறியாளர்

குறிப்பு: பல்கலைக்கழகத் தேர்வுகள் தொடர்பான தகவல்களை பல்கலைக்கழக தகவல் தளத்தில் (Website) பார்த்துக்கொள்ளுமாறு தெரிவிக்கப்படுகிறது. (www.bdu.ac.in)